# வடு

## சாதிய 'வடு'

### அகற்றிடத்துணிந்த நெடும் பயணம் இது

இதழ்-19 ஜூன்-2012

மலரும் மொட்டுக்களின் எதிர்கால ஏற்றம் பக்-04





சாதியை ஒழிக்கும் வழி என்ன? பக்-08

பிரான்சின் தேர்தல் பார்வை பக்-12



François Hollande Nicolas Sarkozy



வெள்ளாம் வேயும் கூடலையில் அறையப்பட்ட வெள்ளிடையும பக்-14

**1960 இல் வேர்கொள்ளாத புனித பூமி** பக்-16



வெள்ளாள ஒன்றுகூடல். பக்-11




பிள்ளைகளை வைத்துக்கொண்டு கடவுளைப் பற்றி சொல்லக்கூடாது. சிலர் பிள்ளைகளை வைத்துக்கொண்டு சில சிற்றின்ப செய்திகளை பேசுவதற்கு பயந்து உங்களுக்கு இங்க என்ன வேலை போங்கள் என்று விரட்டிவிட்டு பிறகு பேசுவது போல கடவுளைப்பற்றிப் பேசும் போதும் செய்யவேண்டும். அவர்களாக உணர்ந்து, கடவுளைப்பற்றி அறிந்து பின்பற்றினால் பின்பற்றிவிட்டு போகட்டும். நாமாக அவர்கள் மனதில் அதைத் திணிக்கக்கூடாது.

-தந்தை பெரியார்-

# வடு வின் பார்வையில்...



இலங்கையில் வாழும் பல்வேறு இனங்களுக்கிடையிலேயான வேற்றுமைகளையும், பகைமையையும், நம்பிக்கையீனங்களையும் நிரந்தரமாக்கும் ஓர் அரசியல் நாகரிகமே இலங்கையில் தொடர்ச்சியாக பேணப்பட்டுவருகின்றது.

தமிழ், சிங்கள அரசியல் இன முரண்பாடுகளின் தொடர்ச்சியாகவே 25 வருடங்களுக்கும் மேலாக எம்மக்கள் அச்சம், பயம், இழப்பு, அழிவுகளோடு வாழும் நிர்ப்பந்தத்திற்குள்ளானார்கள். இவை தவிர்க்கப்பட முடியாதவை என நிகழ்த்தப்பட்ட கெடூரங்கள் அனைத்தையும் மூடி மறைத்து நியாயப்படுத்துவதை தமது நாகரீகமாக ‘தமிழ் பெரும்பான்மை’ அரசியல் வலியுறுத்தி வருகின்றது.

மட்டக்களப்பில் நிகழ்ந்த தமிழரசுக் கட்சியின் 14வது தேசிய மாநாட்டில் திரு. சம்பந்தன் அவர்களின் பேச்சிற்கும் பிரபாகரன் அவர்கள் மாவீரர் உரைகளில் பேசிய பேச்சிற்கும் உள்ள நெருக்கத்தை நாம் அச்சத்துடன் நோக்கவேண்டியள்ளது.

‘நாம் அடிப்படை இலக்கினை விட்டுக்கொடுக்கவில்லை....நாம் இன்னமும் அதே நோக்கத்தை கொண்டிருக்கின்றோம்’ எனும் சம்பந்தன் அவர்களின் சொற் பிரயோகங்களுக்கு ஊக்கம் அளிக்கும் சகத்திகள் யார்?

புலிகளை தோற்கடித்தன் ஊடாக தமிழ் மக்களுக்கான அனைத்துப் பிரச்சனைகளையும் தாம் நிறைவேற்றி விட்டதான மனநிலையிலேயே இலங்கை அரசாங்கம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. தனது ஆட்சியின் தொடர்ச்சியை பாதுகாப்பதற்கு தற்போதைய அரசிற்கு தமிழ் மக்களின் பலம் மிக முக்கியமான ஒன்றல்ல என்பதால் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை தொடர்ந்து பலம் இழக்கவைப்பதை இலக்காக முன்வைத்து செயல்பட்டு வருகின்றது.

“எதிர்க்கட்சியின் நியாயமான செயல் பாடுகள் மூலமாகவே அரசாங்கத்தின் மீதான குறைகளை மக்கள் அறிந்து கொள்வார்கள். ஆனால் எதிர்க்கட்சியோ மிகவும் பலவீனமானதாகவும் மக்களுக்கு நம்பிக்கைக்குரிய கட்சியாகவும் செயல்படவில்லை. அரசாங்கத்திற்கு எதிரான விடயங்களை மக்கள் எதிர்க்கட்சி மூலமாகவே தெரிந்து கொள்வார்கள். ஆனால் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியோ அரசாங்கத்தின் மீது எவ்வித குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியாதுள்ளது. சர்வதேசமே வியப்படையும் வகையில் நாம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தியுள்ளோம். பல்வேறு அபிவிருத்திகளில் முன்னணியில் நிற்கின்றோம்” என்பதாக அரச சார்பு ஊடகங்கள் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றது.

உண்மையில் இலங்கையில் பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு சில பன்நாட்டு நிறுவன உடைமையாளர்களுக்கும், உள்ளூர் பரம்பரைச் செல்வச் சீமான்களுக்கும், அரசாங்கத்திற்கு நெருக்கமானவர்களுக்கு மட்டும் பயனுள்ளதாகவே வீங்கிப் பெருத்து வருகின்றது. அவர்களே அனைத்து வகையிலும் செழித்து வாழ்கின்றார்கள். கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், கூலித்தொழிலாளர்கள், தனியார்துறை ஊழியர்கள் என இலங்கையில் வாழும் பெரும்பான்மையினரின் வாழ்க்கை நிலைமையோ மிகவும் பின்தங்கிய நிலைமையிலேயே இருந்து வருகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டில் வாழும் அனைத்து இனங்களையும் மையப்படுத்திய ஒன்றாக இருக்கவேண்டும். அதற்குரிய முன்நிபந்தனையாக இனங்களுக்கிடையிலான வேறுபாடுகளை புரிந்து கொள்வது. இனங்களுக்கிடையிலான தனித்துவங்களை மதிப்பது, இனங்களுக்கிடையிலான பகைமைகளை களைவது, இனங்களுக்கிடையிலான சந்தேகங்களை போக்குவது போன்ற அரசியல் நாகரீகமே ஒரு நாட்டின் பெருமைக்கும், வளர்ச்சிக்கும் உகந்ததாக கருத முடியும். இலங்கையில் இவற்றை அடிப்படையாக கொண்டு செயல்படும் அரசியல் சக்தி எதுவும் இருப்பதாக ‘வடு’வின் பார்வைக்கு தென்படவில்லை.

❐

# 30 வருடங்களாகியும் ரூ.3000 வேதனம் பெறும் ஆசிரியை

30 வருட காலமாக ஆசிரியைச் சேவை செய்த போதும் இந்த முப்பதாவது வருடத்தில் பெறும் மாதாந்த வேதனம் ரூ. 3000 மட்டுமே. இப்படியான துர்ப்பாக்கிய நிலை எம் மக்கள் மத்தியில் இன்றும் இருந்து வருவது மிகவும் வேதனைக்குரியது.

தற்காலத்தில் க.பொ.த.உயர்தர கல்வித் தகமையுடன் கற்பிக்கப்படும் முன்பள்ளி ஆசிரியர்கள் மத்தியில் க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தி பெற முடியாத காரணத்தால் 1982ல் தனது கற்பித்தல் சேவையை ஆரம்பித்தார் திருமதி பவானிமலர் ஆசிரியை. இவர் கடந்த 30 வருடங்களாக ஆசிரியைத் தொழில் ஈடுபட்டு வருகின்ற போதும் தற்போதய மாதாந்த வேதனம் ரூ.3000 மட்டுமே.

இவர் கணவன் சிறு வயதிலே விட்டுச் சென்ற போதும் இன்றுவரை தனது மகளுடன் ஒரு சிறு குடிசை வீட்டிலே வாழ்ந்து வருகின்றார். சொந்தக் காணி எதுவும் இல்லாததால் அரச வீட்டுத் திட்டம் எதுவும் வழங்கப்படவில்லை.

க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தி பெற முடியாததால் 2010ல் நடைமுறைக்கு வந்த “முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி டிப்ளோமாவை” பூர்த்தி செய்யவில்லை. இருந்த போதும் முன்பள்ளி ஆசிரியருக்குத் தேவையான ஏனைய பயிற்சிகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல முப்பது வருட கால அனுபவத்தையும் கொண்டுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் நீண்ட கால சேவையாற்றிய முன்பள்ளி ஆசிரியர்களில் ஒருவராக இவர் கௌரவிக்கப்பட்டதுடன் சிறந்த கற்பித்தலுக்கான விருதும் வழங்கப்பட்டுள்ளது. கௌரவங்களும் சான்றிதழ்களும் பல பெற்றிருந்தாலும் ஆசிரியரின் வேதனம் மட்டும் இன்னமும் அப்படியே உள்ளது. இந்த கௌரவங்களும் சான்றிதழ்களும் மனதிற்கு சந்தோசத்தை மட்டும் தான் கொடுக்க முடியுமே தவிர வாழ்க்கைத் தரத்தை என்றும் உயர்த்தி விடப்போவதில்லை.

வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருகின்ற இக்காலகட்டத்தில் இந்த வருமானம் எந்தளவிற்குப் போதுமானது? பிள்ளைகளுக்கு எவ்வாறு சிறந்ததொரு எதிர்காலத்தை வழங்க முடியும்? அநேக கிராமப்புற முன்பள்ளி ஆசிரியர்களின் நிலை இவ்வாறுதான் தொடர்கின்றது. சமூகத்திலுள்ள சிறு தேவைகளை எல்லாம் கண்டறிந்து பூர்த்தி செய்யும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் இவ்விடயத்தில் நீண்டகால மௌனிகளாக இருப்பது ஏன்? இந்த நிலை நிச்சயம் மாற்றப்பட வேண்டும். இதற்கு முற்றுப்புள்ளி வைப்பவர் யார்? என்று கேள்வி எழுப்புகின்றார் பாதிக்கப்பட்ட புன்னாலைக்கட்டுவன் ஈவினை பகுதி முன்பள்ளியின் தற்போதய ஆசிரியை பவானிமலர். ❐


எமது தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் இணையத்தள முகவரி

**காண்பதிலுள்ள காணாததைக் காண்போம்.**

**thuuu.net**



ஒரு கிராமத்தின் வளர்ச்சியை அக்கிராமத்தில் அமைந்துள்ள சனசமூகநிலையம் ஒன்றின் வளர்ச்சியினூடாக அறிந்து கொள்ளலாம். கடந்த காலங்களில் கிராம முன்னேற்றத்திற்கான எந்தவொரு நடவடிக்கைகளாக இருந்தாலும் அவை சனசமூகநிலையத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டது. நிலையத்தினூடாக நடாத்தப்பட்ட அனைத்துப் போராட்டங்களும்

# வளரும் மொட்டுக்களின் எதிர்கால ஏற்றம்

வெற்றி கண்டுள்ளன. நம் கலை, கலாச்சாரம், கல்வி, விளையாட்டு, மக்களது திறமைகள் வெளிக்கொணரும் அரங்கம் என பல வழிகளிலும் கிராம முன்னேற்றத்திற்கான செயற்பாடுகள் நடைபெற்றதுடன் அது ஒரு மகிழ்ச்சிகாரமான விட்டுக்கொடுப்புக்கள் நிறைந்த ஒற்றுமையான சூழலாக இருந்து சமூகத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின.

ஆனால் சிலகாலமாக இதன் நிலை மாறி இளைஞர்கள் கூடி பொழுதுபோக்கும் இடமாகவும், தவறான சிந்தனைகளை வளர்ப்பதற்கேற்ற இடமாகவும், திசைமாறிச் சென்றுகொண்டிருப்பதை காணக் கூடியதாக இருந்தது. ஆம் ...! இவ்வாறான ஒரு பிற்போக்கு நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்ததுதான் சுன்னாகம் தெற்கு கலைவாணி சன சமூகநிலையம்.



ஆனால் இன்று பார்ப்போர் வியப்படையும் வகையில் சிறந்ததொரு மாற்றத்தை தற்போதைய நிர்வாகத்தின் தலைவர் திருமதி.சுரேஸ்குமார் சுவாசினி அவர்கள் மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் ஏற்படுத்திவருகின்றார். 1978ஆம் ஆண்டு கணபதி செல்லப்பா என்பவரால் அன்பளிப்பு செய்யப்பட்ட காணியில் கிராமத்தின் வளர்ச்சிக்காக அன்றைய இளைஞர்களால் உருவாக்கப்பட்ட கலைவாணி சனசமூகநிலையம் கல்வி, கலை போன்றவற்றில் ஆற்றலுடையவர்கள் இல்லாமையால் விளையாட்டு, முன்பள்ளி, சமூக விடுதலைப்போராட்டங்கள் என்பவற்றுடன் தனது வளர்ச்சியை மட்டுப்படுத்தி செயல்பட்டு வந்தது. கடந்தகால யுத்தம், நிர்வாக சீரின்மை, மக்களுக்கிடையிலான முரண்பாடுகள், தொடர்பாடல் என பல காரணங்களால் இப்பிரதேசத்தின் வளர்ச்சியில் பல்வேறு குறைபாடுகள் நிலவி வந்தது. கல்வியில் அக்கறையின்மை, போதைப் பொருட்களின் நாட்டம், சிறு வயதுத் திருமணம், பதின்ம வயதுக்கர்ப்பம், சிறுவர் தொழில், இல்லற முரண்களால் குடும்பங்களில் பிளவுகள் என

இக்கிராமம் சீரழிந்துகொண்டிருந்தது. சனசமூகநிலையம் 1978ஆம் ஆண்டு பிரதேச சபையில் பதியப்பட்டாலும் கூட நிலையத்திற்கான பெயர் 2012 வரை நிலையத்தில் பொறிக்கப்படாமலேயே இருந்தது.



2012 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நிர்வாகம் மாற்றமடைந்ததைத் தொடர்ந்து கடந்த 02 மாதங்களுக்கிடையில் யாரும் எதிர்பார்த்திராத மாற்றம் நிகழ்ந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. கல்வியில் அக்கறை, பல்வேறு விழாக்கள், பெண்களுக்கான தொழிற் பயிற்சி, கிராம முன்னேற்றம் குறித்த கலந்துரையாடல், சிறுவர் பாதுகாப்பு என பல வழிகளிலும் வளர்ச்சியடைந்து வருகின்றன. இவ்வளர்ச்சியின் முதற்படியாக அமைந்ததுதான் "மலரும் மொட்டுக்களின் எதிர்கால ஏற்றம்" எனும் நிகழ்வு. கவிதை, பேச்சு, பாடல், நடனம், நகைச்சுவை, நாடகம் போன்ற 60இற்கும் மேற்பட்ட கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. சுமார் 10 மணித்தியாலங்களுக்கு மேலாக எந்தக் குழப்பமுமின்றி அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றது. எமது பிள்ளைகளிடமா இவ்வளவு ஆற்றல்களும் ஒளிந்திருந்ததென பெற்றோர்கள் திகைப்பிலும்,ஆச்ச ரியப்படுமளவிற்கும் நிகழ்வுகள் அமைந்திருந்தன. குறிப்பாக செல்வி பிரியங்கா சுரேஸ்குமார் அவர்களது நாட்டிய நிகழ்வானது பார்வையாளர்களது விழிகளுக்கு மட்டுமன்றி மனதிற்கும் விருந்தளித்தது.



இந்நிகழ்விற்காக பல தடவைகள் சுன்னாகம் பிரதேசசபைச் செயலகம் ' வாயிலில் காத்திருந்து நேரடியாக அழைப்பு விடுத்திருந்தபோதும் அங்கிருந்து யாரும் சமூகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எதிர்கால ஏற்றத்தின் ஒரு பகுதியான மணவர்களின் கல்வியிலும் சிறந்த முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக உள்ளது. ஆசிரியர் பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் தரம் 01இல் இருந்து தரம் 11 வரை 65ற்கும் மேற்பட்ட மாணவர்களை உள்வாங்கியதான மாலை நேரக் கல்வி பயிற்றப்பட்டு வருகின்றது. பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாத மணவர்கள், பாடசாலையை விட்டு இடைவிலகிய மணவர்கள் போன்றோரை இனங்கண்டு அவர்களை பாடசாலையில் ஒப்படைக்கும் பணியையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.





பாடசாலை ஆசிரியர்களால் அக்கறை காட்டாது பின்வாங்குகளில் இருந்து அடுத்தடுத்த வகுப்புகளிற்குத் தகுதியற்றிருந்தும் வகுப்பேற்றப்பட்ட

(7 ம் பக்கம் தொடரும்....)

# எச்சரிக்கை

கடந்த காலத்தில் பல்வேறு துன்பங்களையும், உயிர், உடைமைகளையும் இழந்த நாங்கள் இன்று ஓரளவிற்கு பீதியின்றி, கொலை அச்சுறுத்தல்கள் இன்றி,யுத்த சூழலற்ற வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறான எமது வாழ்க்கையை புகலிடத்தில் பாதுகாப்பாகவும் வசதியாகவும் வாழ்ந்துவரும் நீங்கள் குழப்பாதீர்கள். தொடர்ந்தும் எங்களை பலிக்கடாவாக்க முனையும் உங்கள் செயல்பாடுகளை தயவு செய்து நிறுத்திக் கொள்ளுங்கள். அங்கிருந்து கொண்டு நீங்கள் செய்யும் சாகசங்களால் இங்குள்ள அப்பாவிகள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள்.

பிரான்சிலிருந்து ஒருவர் தனது இரண்டு நண்பர்களுக்கு தொலைபேசி வாங்கிக் கொடுக்கும்படி யாழ்ப்பாணம் கொட்டடியில் வசித்துவரும் ஒரு அப்பாவி இளைஞனுக்கு பணம் அனுப்பியுள்ளார். அந்த அப்பாவி இளைஞரும் சூதுவாது தெரியாமல் தனது பெயரில் தொலைபேசியை வாங்கி அவர்களுக்கு கொடுத்துள்ளார். சில நாட்களுக்குப்பின்பு தொலைபேசி வாங்கிக் கொடுத்த அந்த அப்பாவி இளைஞனை இராணுவம் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளது.

அப்பாவி இளைஞர் வாங்கிக் கொடுத்த தொலைபேசி மூலமாக மேற்கொள்ளப்பட்ட உரையாடல்கள் இலங்கை இராணுவத்தால் இடைமறிக்கப்பட்டிருக்கின்றது. அதன்காரணமாகவே அந்த அப்பாவி இளைஞர் விசாரணைக் காக பூசா முகாமில் சிறை வைக்கப்பட்டுள்ளார். புகலிட கனவான்களே உங்களுக்கு தமிழ்ஈழம் தேவையென்றால் இங்க வந்து இராணுவத்தோட சண்டை பிடியுங்கோ. தயவு செய்து இங்குள்ள அப்பாவிகளின் வாழ்க்கையோட விளையாடாதீர் கள். இங்க இருந்து தமிழ் ஈழம் கேட்டுட்டு நீங்கள் ஓடிப்போய் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள. அப்படியே அங்கே இருங்கோ! தயவுசெய்து எங்களையும் நிம்மதியாக இருக்கவிடுங்கோ.

இவ்வாறு சிறையில் வாடும் இளைஞனின் குடும்பத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

❐

## மீண்டும் புனரமைக்கப்பட்ட சன சமூக நிலையம்

வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தில் இயங்கி வந்த பாரதி சனசமூக நிலையம் யுத்த சூழலாலும், மற்றும் பல்வேறு காரணங்களாலும் பன்னிரெண்டு ஆண்டுகள் செயற்பாடுகள் எதுவும் இன்றி இருந்தது. கடந்த 31-03-2012 இல் மீண்டும் புனரமைக்கப்பட்டு பாரதி சனசமூக நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது. புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையில் அதிகமானவர்கள் பெண்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயாமாக உள்ளது.

# மாநாடு



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட முதலாவது தேசிய மாநாடு மட்டக்களப்பிலுள்ள கல்லடிப் பிரதேசத்தில் நிகழ்ந்தது. 15ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் தலைவர் திரு.தேவதாசனும், அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் இணைச் செயலாளரான திரு.தமிழ்அழகன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எனும் கட்சியானது, ஆயுதப்போராட்டத்தில் இருந்து விலகி ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து, கிழக்கு மாகாணசபை ஆட்சியையும் பொறுப்புடன் மிகத் திறம்பட நடாத்தி வருவதோடு, கிழக்கு மாகாணமும் பல்வேறு அபிவிருத்திகள் அடைவதற்கும் காரணமாக இருந்து வருகின்றது.

அக்கட்சியானது தனது முதலாவது மாநாட்டை இந்தவகையில் மிகச் சிறப்பாக நடாத்தியது மிகப்பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ❒

## "மலரும் மொட்டுக்களின் எதிர்கால ஏற்றம்.."

5ம் பக்கத் தொடர்ச்சி......

மாணவர்களில் எழுத வாசிக்கத் தெரியாதவர்களை இனங்கண்டு அவர்களுக்கான அடிப்படைக் கல்வியையும் புகட்டிவருகிறார்கள். சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு தமிழ் அரிச்சுவடி எழுத்துக்களும், எண்கணித இலக்கங்களில் 1,2,3,4 இற்கு மேல் தெரியாமலும், எழுத வாசிக்கத் தொரியாதவராகவும் இருப்பதை அறிந்து அவருக்கு தகுந்த பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

அது மட்டுமன்றி உயர் கல்வியைத் தொடர முடியாமல் பாடசாலைக் கல்வியுடன் நிறுத்திய பெண்கள், விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், சுயதொழில் செய்ய விரும்பும் பெண்கள் போன்றோரை ஒன்று திரட்டி இவர்களுக்கான தொழிற்பயிற்சிக் கல்வியையும் வழங்கி வருகிறார்கள்.

இவ்வாறு பல பணிகளையாற்றி வரும் கலைவாணி சனசமூக நிலையமானது ஆலவிருட்சம் போல் கிளைவிட்டுச் சடைத்து செழித்து நிற்பினும், இந்நிலையம் மேன்மேலும் தன்னை பலப்படுத்திக் கொள்வதற்காக சமூக ஆர்வலர்களிடமிருந்து அவர்களால் முடிந்த அனைத்து உதவிகளையும், ஆலோசனைகளையும் எதிர்பாக்கின்றது. ❒



# சாதியை ஒழிக்கும் வழி என்ன?

-தொடர்ச்சி-

இந்தியாவில் சமுதாயச் சீர்திருத்தம் என்பது, சொர்க்கத்துக்குச் செல்லும் பாதையைப் போலவே கரடுமுரடானது, துன்பம் நிறைந்தது. எளிமையானது அல்ல.

இந்தியாவில் சமுதாயச் சீர்திருத்தத்துக்கு ஆதரவாளர்கள் சிலர். விமர்சகர்கள் பலர். விமர்சகர்கள் இரு வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். அரசியல் சீர்திருத்தவாதிகளைக் கொண்டது ஒரு பிரிவு. 'சோசலிஸ்டு'கள் (சமநிலை வாதி) மறு பிரிவு.

'கேடுகெட்ட சமூகப் பழக்க வழக்கங்களால் கெட்டித் தட்டிப்போன இந்து சமுதாயமானது, மேம்பாடு காண்பதற்கான சூழலில் இல்லை. இந்தக் கேடுகெட்ட தன்மைகளை அழித் தொழிக்க, நீண்ட நெடிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சமுதாய மோபாடு இல்லாமல் பிற துறைகளில் நிரந்தரமான முன்னேற்றம் எதையும் சாதித்து விட முடியாது' என்பதை ஒரு காலகட்டத்தில் எல்லாரும் உணர்ந்தே இருந்தார்கள். இந்தக் காரணத்தை ஏற்றுக் கொண்டதால்தான் 'தேசிய காங்கிரஸ;' தனியாகத் தோன்றாமல் 'சோசியல் கான்பெரன்சோடு' (சமூக மாநாடு) சேர்ந்தே தோன்றியது. சமூக சீர்திருத்தமா? அரசியல் சீர்திருத்தமா?

அரசியல் இயக்கங்களில் இருந்த குறைபாடுகளை வரையறுக்க காங்கிரஸ் முயற்சி செய்து கொண்டிருந்த நேரத்தில், 'சோசியல் கான்பெரன்ஸ்' இந்து சமூகத்தின் சமுதாய இயக்கங்களில் இருந்த குறைபாடுகளை நீக்குவதில் ஈடுபட்டிருந்தது. சிறிது காலத்துக்கு 'காங்கிரசும்', 'கான்பெரன்சும்' "பொது நடவடிக்கைக்கான இரண்டு அங்கங்களாக செயல்பட்டன. தங்கள் ஆண்டுக் கூட்டங்களைக் கூட, ஒரே பந்தலில் நடத்திக் கொண்டன. ஆனால், விரைவில் இந்த இரு பிரிவுகளும் இரு வேறு கட்சிகளாக உருவெடுத்தன. அரசியல் சீர்திருத்தக் கட்சி ஒன்று, சமூக சீர்திருத்தக் கட்சி மற்றொன்று. இந்த இரு கட்சிகளுக்கும் இடையில் கடுமையான கருத்து வேறுபாடுகள் தோன்றின. அரசியல் சீர்திருத்தப் பிரிவு, தேசிய காங்கிரசை ஆதரித்தது. சமுதாய சீர்திருத்தப் பிரிவு 'சோசியல் கான்பெரன்சை' ஆதரித்தது. இவ்வாறாக, இந்த இரு பிரிவுகளும் இரு பகை முகாம்களாக மாறின. அவைகளுக்கு இடையே இருந்த பிரச்சனை– சமுதாய சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தம் இவற்றில் எதற்குப் பிறகு எது நடக்க வேண்டும் என்பதுதான்.

பத்தாண்டுகள் வரை இந்த இரு வேறு சக்திகளும் சம நிலையில் இருந்தன. ஆகவே யாருக்கும் வெற்றி கிடைக்காமல் போர் நடந்து கொண்டே இருந்தது. எப்படி இருப்பினும், 'சோசியல் கான்பெரன்'சின் எதிர்காலம் வெகு வேகமாக மங்கி வந்தது தெளிவாகத் தெரிந்தது.

'சோசியல் கான்பெரன்சின்' கூட்டத் தொடர்களுக்குத் தலைமை தாங்கிய சான்றோர்கள், 'படித்த இந்துக்களில் பெரும்பான்மையோர்– அரசியல் முன்னேற்றத்துக்கே ஆதரவாக இருக்கிறார்கள் சமுதாய சீர்திருத்தத்தில் கவனம் செலுத்துவதில்லை' என்று குறைபட்டுக் கொண்டார்கள். காங்கிரசுக்கான ஆதரவு

தொடர்ந்து பெருகி வருகிறது. 'சோசியல் கான்பெரன்'சுக்கு மக்களின் ஆதரவு குறைந்து கொண்டே வருகிறது என்றும் அவர்கள் பொருமினர். படித்த கூட்டத்தின் அக்கறையின்மையும் வெகுமக்களின் ஆதரவின்மையும் 'சோசியல் கான்பெரன்'சாரை காங்கிரசுக்கு எதிரி முகாமாக உருவாக்கியது. அதற்கு முன்பெல்லாம் 'சோசியல் கான்பெரன்'சின் கூட்டம் நடக்க, காங்கிரஸ் தன் பந்தலை பயன்படுத்த பெயரளவிலாவது அனுமதித்தது. காலஞ்சென்ற திலகரின் தலைமைக் காலத்திலிருந்து அதைக்கூட செய்யத் தயாராக இல்லை.

'சோசியல் கான்பெரன்ஸ்' தனக்காக தன்னுடைய சொந்த பந்தலைப் போட முயன்றபோது, பந்தலை எரித்துவிடப் போவதாக எதிராளிகளிடம் இருந்து மிரட்டல் ஒன்று கிளம்பியது. அந்த அளவுக்குப் பகைமை உணர்வு உச்ச நிலையில் இருந்தது. இவ்வாறாக, காலப் போக்கில் அரசி யல் சீர்திருத்தத்துக்கு ஆதரவாக இருந்த கட்சி வென்றது. 'சோசியல் கன்பெரன்ஸ்'

மங்கி மறைந்தது மறக்கப்பட்டது.

1892 இல் அலகாபாத்தில் காங்கிரசின் எட்டாவது கூட்டத்துக்குத் தலைவர் என்ற முறையில் திரு. பானர்ஜி என்பவர் ஆற்றிய உரை, 'சோசியல் கான்பெரன்சி'ன் சாவுக்கு வாசிக்கப்பட்ட இரங்கல் அறிக்கை போல் இருந்தது. காங்கிரசின் மனோபாவத்தை வெளிப்படுத்துவதற்கு அது ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்ற முறையில், அவருடைய பேச்சின் ஒரு சிறு பகுதியைத் தருகிறேன் :

"நம்முடைய சமுதாய அமைப்பைச் சீர்திருத்தாதவரை, அரசி யல் சீர்திருத்தத்துக்கு நாம் அருகதை அற்றவர்கள் என்று கூறுபவர்களை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. சமுதாய சீர்திருத்தத்துக்கும் அரசியல் சீர்திருத்தத்துக்கும், எவ்விதத் தொடர்பும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. நம்முடைய விதவைகள் மறுமணமே செய்து கொள்வதில்லை மற்ற நாடுகளைவிட நம் நாட்டுப் பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடந்து விடுகிறது நாம் நம் நண்பர்களை காணச் செல்லும்போது, நம் மனைவியையும் பெண்மக்களையும் நம்முடன் அழைத்துச் செல்வதில்லை 'ஆக்ஸ்போர்டு'க்கோ 'கேம்பிரிட்ஜ்'க்கோ நம் பெண்களை நாம் அனுப்புவதில்லை– இக்காரணங்களால் நாம் அரசியல் சீர்திருத்தத்துக்கு அருகதை அற்றவர்களாகி விடுவோமா என்ன?" (கைதட்டல்)

அரசியல் சீர்திருத்தத்துக்கான வாதத்தை பானர்ஜி முன்வைத்த வகையில் நான் குறிப்பிட்டுள்ளேன். காங்கிரசுக்கு வெற்றி கிடைத்ததற்காக மகிழ்பவர்கள் பலர். ஆனால், சமுதாய சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தை முன்னிறுத்துவோர், பானர்ஜியால் முன் வைக்கப்பட்டது போன்ற வாதம் முடிவா-னதுதானா என்று கேட்கக் கூடும். நியாயத்தின் பக்கம் நிற்கிறவர்களுக்குதான் வெற்றி கிடைத்தது என்பதை அந்த வாதம் நிரூபிக்கின்றதா? சமுதாய சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தத்தின் மீது எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று, அந்த வாதம் தீர்மானமாக நிரூபிக்கின்றதா? என்ற கேள்விகளை அவர்கள் எழுப்பக்கூடும். பிரச்சினையின் மறுபக்கத்தை நான் எடுத்துச் சொன்னால், பிரச்சனையை முழுவதுமாகப் புரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும். நான் சொல்லப் போகும் உண்மைக்குச் சான்றாக, இன்று தீண்டத்தகாதோர் எப்படி எல்லாம் நடத்தப்படுகின்றனர் என்பதை உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

**"தீண்டப்படாதோரின் சிக்கலுக்கும் அரசியல் அல்லது பொருளாதார உர-மைகள் மறுக்கப்பட்டது தான் காரணம் என்றால், சட்ட ரீதியாகவோ, அரசியல் அமைப்புச் சட்ட முறைகளிலோ அதைத் தீர்த்துக்கொள்ளலாம். அரசில், பொ-ருளாதார உரிமைகள் மறுக்கப்படுவது இந்துக்களின் சமூக உளவியலின் விளைவு ஆகும். தீண்டபடாதோரின் சிக்கலோ இந்துக்களின் சமூக நடத்தையால் நேரடியா-கத் தோன்றுவதாகும். இந்துக்கள் தங்களுடைய மனநிலையை மாற்றிக்கொண்டால் மட்டுமே தீண்டாமை ஒழியும். இந்துக்களின் இந்த வாழ்க்கை முறையை எப்படி கை-விடச் செய்வது என்பதுதான் சிக்கல். ஒரு நாடு பழக்கப்பட்டுப் போன தன்னுடைய வாழ்க்கை முறையை முழுமையாகக் கைவிடுவது என்பது எளிய செயல் அல்ல. இது இந்துக்களுக்குப் பழக்கப்பட்டுப்போன வாழ்க்கை முறை என்பதோடு, அவர்களுடைய மதத்தால் புனிதப்பட்டுப்போன ஒன்றாகவும் இருக்கிறது அவர்கள் அப்படித்தான் கருதுகிறார்கள்!**

~அம்பேத்கர்~

தொடரும்...

வடு -18 இன் தொடர்ச்சி.....



தற்போது கனடாவில் வசித்துவரும்

# என்.கே.ரகுநாதன்

அவர்களுடன் உரையாடிய கற்சுறாவின் அனுபவங்கள்.

கற்சுறா:
தற்போதும் துப்பாக்கி நிழலில் சாதி மறைந்திருக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா?

ரகுநாதன்:
காலப்போக்கில் கொஞ்சம் சாதிப்பாகுபாடு குறைந்திருக்கிறதுதான். ஆனால் துப்பாக்கி நிழலில் சாதி மறைந்திருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேணும். ஆனால் ஒன்று பகிரங்கமாக பேசமுடியாத சூழல் இருக்கிறது. அந்த நளவனோட என்னாடா கதை உனக்கு என்று பகிரங்கமாகச் சொல்லமுடியாதுள்ளது. என்னுடைய அம்மாவின் காலங்கள். கிட்டத்தட்ட 1900ம் வருடங்கள். அந்தக் காலங்களில் வயிற்றில் காவோலைகட்டிக் கொண்டுதான் வீதிகளில் திரியவேண்டும். அந்தமாதிரியான அடக்குமுறை தற்போது இல்லை என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். புலம் பெயர் சூழலிலும் சாதிப்பாகுபாடு அதிகமாகவே பார்க்கப்படுகிறது. நாங்கள் வாழும் இந்த வீட்டிற்குப் பின்னுள்ளவர்கள் தமிழர்கள். அவர்கள் எங்களுடன் ஆரம்பத்தில் நல்லபடி பழகிவந்தார்கள். மிகவிரைவில் எங்களை யாரென்று தேடிப்பிடித்துவிட்டார்கள் தற்போது அவர்கள் எங்களுடன் அதிகம் பழகுவதில்லை.

கற்சுறா:
உங்கள் எழுத்துச் செயற்பாடுகள் பற்றி?

ரகுநாதன்:

1964ம் ஆண்டு நிலவிலே பேசுவோம். சிறுகதைத் தொகுதி வந்தது. தொகுதியில் உள்ள "நிலவிலே பேசுவோம்" என்ற சிறுகதை முக்கியமானது. மது ஒழிப்புப் பற்றிப் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிவிட்டு வரும் ஒரு சமூகப் பெரியவரைச் சந்திக்க சில இளைஞர்கள் அவர் வீட்டிற்குச் செல்கிறார்கள். மது ஒழிப்பு முக்கியம்தான் ஆனால் அதைவிடத் தீண்டாமை என்பது கொடுமை நீங்கள் அதுபற்றி ஒரு வாய் பேசவில்லை என்பதைக் கேட்கவே அவர்கள் பெரியவர் வீட்டிற்குச் சென்றார்கள். அவ்விளைஞர்களை அவர் தனது வீட்டிற்குள் கூட்டிச் செல்லாமல் வெளியில் நல்ல நிலவு வாருங்கள் அந்த மணலில் இருந்து பேசுவோம் எனக் கூட்டிச் செல்கிறார். இதுதான் கதை. இந்தச் சிறுகதைத் தொகுதிக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைக்க இருந்தும் அந்தக் குழுவில் இருந்த சிலரின் அழுத்தத்தால் பரிசு கிடைக்காமல் போனது. நிலவிலே பேசுவோம் என்ற சிறு-கதை நிட்சயம் அவர்களுக்குப் பிடித்திருக்காது. 1951ம் ஆண்டு எனக்கு 20வயது அந்தநேரம் நான் எழுதிய சிறுகதை தமிழ்நாட்டு சிற்றிதழ் பொன்னியில் வெளிவந்தது. எனது கதைக்குரிய கருவை அட்டைப்படமாகப் போட்டே அவ்விதழ் வெளிவந்தது. எனக்கு அந்த நேரம் பல பத்திரிகைகள் ஆதரவு தந்தன. எழுதிய விடயங்கள் அனைத்தும் பிரசுரமாகும்.

தொடரும்... ❐

---

2000 ஆண்டுகளுக்கு முன் நம்மைப்போன்று சீர்திருத்தம் செய்யத்தோன்றியவர்களில் புத்தரும் ஒருவராவர். அவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் யாவும் பார்ப்பன வர்க்கத்தால் அழிக்கப்பட்டுவிட்டன.

-தந்தை பெரியார்-

# வெள்ளாள ஒன்றுகூடல்

Virakesari Saturday, April 7, 2012

## இன்று சைவ வேளாளர் சமூக நல சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

சைவ வேளாளர் சமூக நல சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய சண்முக விலாஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபையினர் மற்றும் அங்கத்தினர் தெரிவு இடம்பெறும்.

1982 ஆம் ஆண்டுக்கு பின்னர் கடந்த 30 வருடங்களாக செயல்படாமல் இருந்த சைவ வேளாளர் சமூக நல சங்கம் தற்பொழுது சைவ வேளாளர் சமூகத்தின் நன்மைக் காகவும், அவர்களுடைய சந்ததியினர்களுக் காகவும் பல்வேறு விதமான ஆக்கபூர்வமான பணிகளை செய்வதற்கு திட்டங்களை வகுக்க உறுதி பூண்டுள்ளது. இலங்கை வாழ் சைவ வேளாளர்கள் தங்கள் குடும்பத்தோடு கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

« சைவ வேளாளர் சமூகத்தின் நன்மைக்காகவும், அவர்களின் சந்ததியினர்களுக்காகவும் பல்வேறு விதமான ஆக்கபூர்வமான பணிகளை செய்வதற்கு திட்டங்களை வகுக்க உறுதி பூண்டுள்ளது » எனும் வெள்ளாளச் சமூக ஒடுக்குமுறைக் கோரிக்கையுடன் கடந்த 7ஆம் திகதி ஏப்ரல் 2012 இல் கொழும்பில் ஒன்றுகூடல் ஒன்று நிகழ்ந்துள்ளது.

இந்த வெள்ளாளச் சிந்தனையின் ஆக்கபூர்வமான சமூகப்பணி என்பது என்ன?

இந்த வெள்ளாள சாதியினரின் சமூக திட்டங்கள் என்னவாக இருக்கும்?

இந்த வெள்ளாள சாதிய அடையாளத்தை ஏந்தியபடி இவர்கள் வீதிக்கு வருவதன் நோக்கம் என்ன?

இனமுரண்பாடே முதன் முரண்பாடு என்பதனூடாக அரசியல் செய்பவர்களும், தமிழ்த் தேசிய விடுதலையே அனைத்துத் தமிழர்களும் கண்டடைய வேண்டிய விடிவெள்ளி என கட்சி நடத்துபவர்களும் இந்த வெள்ளாள ஒன்றிணைவு குறித்து எதுவும் பேசாது ஊர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர். புகலிடத்தில் இது குறித்து கேள்வி எழுப்பியபோது 'இது குறித்து அலட்டிக் கொள்ளாதீர்கள் கொழும்பில் வாழும் இந்திய வம்சாவளியினர் சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கை தான் இது. இதனால் ஒன்றும் குடி முழுகிவிடாது என புகலிட இலக்கிய வம்சாவழியினர் மாற்றுக் கருத்துரைக்கின்றார்கள். வீரகேசரியில் வெள்ளாள அணிதிரட்டும் விளம்பரத்தை சற்று அகல விழி திறந்து படியுங்கள்.

'82ஆம் ஆண்டிற்குப் பின்னர் கடந்த 30 வருடங்களாக செயற்படாமல் இருந்த சைவ வேளாளர் சமூக நல சங்கம்.'

என அட்டகாசமாக வலியுறுத்தி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இந்த சைவ வேளாளர் எனும் சொல்லாடலும், 30வருட கால இழப்பெனபதும் இந்திய வம்சாவழியினருக்கு எந்தவகையில் பொருத்தமானது! என நாம் புகலிட இலக்கிய வம்சாவழியிரைக் கேட்டால் கோட்பாடுகளை பொறுக்கிக் காட்டி தமது நியாயத்தை பலப்படுத்த முனைகின்றார்கள். அரசியல் பேசுபவர்கள், இலக்கியம் பேசுபவர்கள், மார்க்சியம் பேசுபவர்கள், மனிதஉரிமை பேசுபவர்கள், பெண்உரிமை பேசுபவர்கள் என அனைவருமே தமது தோள்களிலிருந்து சாதிய அடையாளத்தை இறக்க மனமில்லாதவர்களாகவே உள்ளனர்.

சாதிய சமூக ஒடுக்குமுறை குறித்து சிந்திப்பவர்கள், சாதிய ஏற்றத்தாழ்வு மனநிலையால் ஏற்படும் சமூக அனர்த்தங்கள் குறித்து சிந்திப்பவர்கள், இந்த வெள்ளாள ஒன்று கூடலின் பின்னால் உள்ள அரசியலையும், அதன் மேட்டுக்குடிப் பாரம்பரியத்தையும் எதிர்கொள்வது எப்படி என்பதையும் மேலதிகமாக சிந்திக்க வேண்டியுள்ளது. ❒

# பிரான்சில் நடைபெற்ற தேர்தல் குறித்த ஒரு பார்வை.



22 ஏப்பரல் 2012 இல் ஜனாதிபதித் தேர்தலுக்கான முதலாவது சுற்று வாக்கெடுப்பு நடைபெற்றது. முதலாவது சுற்றில் மிக அதிகமானோர் வேட்பாளர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தபோதும் இறுதியில் பத்து வேட்பாளர்களே போட்டியிடும் தகுதியைப்பெற்றனர். அவர்களில் சோசலிசக் கட்சியின் வேட்பாளர் பிரான்சுவா ஹொலண்ட் (28.63வீத வாக்குகள்) அவர்களும், வலது சாரிக்கட்சியின் வேட்பாளரான நிக்கோலா சார்க்கோசி (27.18வீத வாக்குகள்)அவர்களும் இறுதிச்சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டார்கள். இரண்டாவது சுற்று 6 மே 2012 இல் நடைபெற்றது அநேகரும் எதிர்பார்த்துபோல் இடதுசாரிக்கட்சியின் வேட்பாளர் 51.62வீத வாக்குகளைப்பெற்று பிரான்சின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாடுகளில் வாழும் வெளிநாட்டவர்களான எமக்கு மேற்குலகில் நடைபெறும் ஜனநாயக அரசியல் மரபுகள் பலவிடயங்களை கற்றுக்கொள்ளும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திவருகின்றது. அதில் நாம் பிரதானமாக கருதுவது வேட்பாளர்களின் நேருக்கு நேரானவிவாதம். தொலைக்காட்சிகளில் நடைபெறும் இவ்வாறான விவாதமானது பிரான்சின் ஜனநாயக அரசியல் பாரம்பரியமாக பேணப்பட்டு வருகின்றது. இவ்வாதங்களை மக்கள் மிக ஆர்வமாக அவதானித்து வருவார்கள். இருவருக்கும் இடையிலேயான வாக்கு வாதங்கள் பார்வையாளர் களுக்கு மிக ஆர்வமான, சுவையான காட்சியாக அமைந்திருக்கும்.



François Hollande　　Nicolas Sarkozy

உலகிலுள்ள அரசியல் வாதிகளுக்கே உரிய 'பொதுவுடைமை' அம்சமான...பொய் சொல்லுவார்கள், செய்ததை இல்லை என மறுப்பார்கள், செய்யாததை செய்ததாக கூறுவார்கள், தவறான புள்ளிவிபரங்களை கூறுவார்கள், ஒருவரை ஒருவர் கிண்டல் செய்வார்கள் இவ்வாறு பார்ப்பதற்கு மிக நகைச்சுவையாகவும், ஆர்வமாகவும் இருக்கும்.

இருவரும் நேருக்கு நேராக பேசிய விடயங்களை இங்குள்ள பத்திரிகைகள் மிக கறாராக அவதானித்து மறுநாள் இவர்கள் பேசியதன் உண்மை பொய்களை அம்பலபடுத்துவார்கள். அந்தவகையில் வேட்பாளர்கள் இருவரும் பொருளாதாரம் குறித்து உரையாடிய புள்ளிவிபரங்கள் தவறானதாக உள்ளதை பத்திரிகைகள் ஊடாக அறியக்கூடியதாக இருந்தது. பிரான்சின் தேசிய பொருளாதாரப் புள்ளிவிபர ஆய்வறிக்கைகளை (institute national de la staistique et des études économiques) மறுநாள் பத்திரிகைகள் அதற்கான ஆதாரமாக முன் வைத்தன. மேலும் சோசலிசக்கட்சியின் வேட்பாளரான பிரான்சுவா ஹொலண்ட் அவர்கள் 'நீங்கள் உங்கள் கட்சிக்கு நிதி சேகரிப்பதற்காக பல பிரமுகர்களை "பிறிஸ்டல்" எனும் ஆடம்பர நட்சத்திர விடுதியில் சந்தித் துள்ளீர்கள்தானே' என நிக்கோலா சார்க்கோசியிடம் கேட்டபோது அதற்கு அவர் தான் அப்படி ஒரு சந்திப்பையும் செய்ய வில்லை நீங்கள் தவறாக பிரச்சாரம் செய்கின்றீர்கள் எனக் கூறினார். மறுநாள் பத்திரிகைகள் நிக்கோலா சார்க்கோசி அவர்கள் அந்த ஆடம்பர விடுதியில்

கட்சி நிதி சேகரிப்தற்காக சந்தித்த விடயத்தை ஆதார பூர்வமாக அம்பலப்படுத்தியிருந்தன.

இவ்வாறான வேட்பாளர்களின் முரண்பாடான, பொய்யான உரையாடல்களை மக்கள் அவதானித்தாலும் பிரான்சில் அரசியல் மாற்றம் ஒன்று அவசியம் என்பதை பெரும்பாலானோர் விரும்பியுள்ளனர். தற்போதைய பொருளாதாரமும் மக்களின் வாழ்க்கை செலவும்,வேலையில்லாத் திண்டாட்டமும் பிரான்சை பல்வேறு நெருக்கடிக்குள்ளாக்கி வருகின்றது. இதற்கு உலக பொருளதார நெருக்கடியும் காரணமாக இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருப்பினும் நிக்கோலா சார்க்கோசியின் நிர்வாகமே இதற்கு பிரதான காரணமாக இருப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டி வந்தனர். குறிப்பாக செல்வந்தர்களுக்கான வரிச்சலுகைகளால் செல்வந்தர்கள் தொடர்ந்தும் செல்வந்தர்களாகவும், வறியவர்கள் தொடர்ந்தும் வறியவர்களாகவும் இருக்கும் நிலையே தொடர்ந்து வருகின்றது என்பதாகவும் குற்றச்சாட்டை முன்வைத்தனர். நிக்கோலா சார்க்கோசியின் பணக்காரர்களுக்கான சலுகை, வெளிநாட்டவர்கள் மீதான கடும்போக்கு என்பன அவரது தோல்விக்கு பிரதான காரணமாக இருந்தாலும் புதிய ஜனாதிபதியான பிரான்சுவா ஹொலண்ட் அவர்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேறுவதற்கான சாத்தியப்பாடுகள் மிகவும் கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது. அவருக்கு வாக்களித்த மக்கள் கூட அவரது தேர்தல் வாக்குறுதிகளை நம்பமுடியாதவர்களாகவே உள்ளனர். ஏற்கனவே 17பில்லின் கடனுள்ள நாடாக இருக்கும்போது ஆசிரியர் நியமனங்களை அதிகமாக்குவது, அடிப்படைச்சம்பள உயர்வு, வேலையற்றவர்களுக்கான உதவித்தொகை அதிகரிப்பு போன்ற பல்வேறு சலுகைகளை வழங்கப்போவதாக வாக்களித்துள்ள புதிய ஜனாதிபதி அவர்கள் இவைகளுக்கான பணத்தை எங்கிருந்து பெறப்போகின்றார் எனும் கேள்வி சகல பிரிவினர்களாலும் கேட்கப்படும் கேள்வியாகவே உள்ளது. அதைவிட ஐரோப்பிய யூனியனுக்காக ஜேர்மனால் முன்மொழியப்பட்டதும் அதற்கு முன்நாள் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலா சார்க்கோசி அவர்கள் ஆதரவளித்ததுமான austerity policies க்கு (ஐரோப்பிய யூனியனின் பொருளாதார வளர்ச்சிக்காக அங்கத்துவ நாடுகள் சிக்கனத்தை கடைப்படிப்பது, குறிப்பாக பொதுமக்களுக்கான உதவித்தொகைகளை குறைப்பது) எதிரான கொள்கையுடையவர் பிரான்சுவா ஹொலண்ட் அவர்கள். எனவே இவ்வாறான பல்வேறு சிக்கல்களையும் எதிர்கொள்ள வேண்டியவராக உள்ளார் பிரான்சின் புதிய ஜனாதிபதி அவர்கள்.

பிரான்சின் பதிய ஜனாதிபதியான பிரான்சுவா ஹொலண்ட் அவர்களின் வெற்றியானது சோசலிசக் கட்சியின் வெற்றியாகவும், இடதுசாரிச் சிந்தனைக்கு கிடைத்த ஆதரவாகவும் கருதுகின்ற நிலையும் நிலவுகின்றது. இதில் எந்தவித உண்மையும் இல்லை. நிக்கோலா சார்க்கோசி மீதான வெறுப்பும், வாழ்க்கைச் செலவுச்சுமை அதிகரிப்பு, வேலைவாய்ப்பின்மை, போன்ற காரணங்களால் பிரான்சில் ஒரு உடனடி மாற்றம் தேவை என்பதைக் கருத்தில்கொண்டு அதிகமான மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்தான் இன்றைய பிரான்சின் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலண்ட் அவர்கள்.

❐

## வடு வாசகர்களுக்கு....

“வடு” பத்திரிகைக்கான கதை, கவிதை, கட்டுரை மற்றும் தகவல்கள் போன்ற ஆக்கங்களையும் விமர்சனங்களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.
தொடர்புகட்கு:-

இலங்கைக்கு:-

**‘VADU’**
**N.THAMIL ALAGAN**
**‘MALAR VASA’**
**NORTH, URUMPIRAI**
**URUMPIRAI**

**Vadusrilanka@gmail.com**

புலம் பெயர் நாடுகளுக்கு:

**‘VADU’**
**F.D.S.D.S**
**70, SQUARE DES SAUVES**
**95140 GARGES LES GONESSE**
**FRANCE**
**VADU.WARLD@hotmail.fr**

# வெள்ளாம் பேயும் சுடலையில் அறையப்பட்ட வெள்ளுடையும்



ஒரு ஊரில்
ஒரு சுடலை

அது ஒரு வெள்ளாஞ்சுடலை
பத்து நடை தள்ளி ஒரு கிடங்கு
அதனை
கிணறு என்றுதான் சொன்னார்கள்
எல்லோரும்.
மாரியிலும் கூட உவர் நீர்தான்.

ஒரு சிறு தேவாலயம்
அது ஒரு பள்ளர் கோயில்
இளம் பாதிரியும்
ஆயிரத்திச்சொச்ச சனங்களும்
இவர்களுக்கிடையில்
ஒரே ஒரு பைத்தியக்காரி

இப்படியிருந்துவாற காலத்தில
ஒரு கண்டுத்தாச்சி மாட்டையும்
எட்டு வயது சிறுமியையும்
ஆட்டுக்கு குழை பிடுங்கப்போன
கிழவியையும்
ஆறுமாத காலத்துக்குள்
அடுத்தடுத்து பலி வாங்கியது

வெள்ளாஞ்சுடலைக் கிணறு

சுடலை மாடன் என்றனர் ஊரார்
இல்லை என்றார் பாதிரியார்

அடங்காத வெள்ளாம் பேய் என்றார்
ஊர்ப் பெரியவர்

இல்லை என்றார் பாதிரியார்

எல்லோருக்கும் விசர்
புறுபுறுத்துச் சென்றாள் பைத்தியக்காரி

சுடலை மரத்தில்
நடுச்சாமத்தில்
ஆணியறைந்துவிட்டு வரப்போன பாதிரியார்
செத்துக் கிடந்தார் விடியற்புறம்

வெள்ளாம் பேய்
காட்டுக் காட்டி விட்டது என்றது ஊர்

எல்லோருக்கும் விசர்
புறுபுறுத்துச் சென்றாள் பைத்தியக்காரி

சுடலை அரசமரத்தில்
ஆணியறையப்பட்டபடி தொங்குகிறது
இன்னும்
பாதிரியாரின் வெள்ளுடை.

-பானுபாரதி-
("பிறத்தியாள்" தொகுப்பிலிருந்து)

# சித்தன் கதைக்கிறேன்



யுத்தகாலத்தில மூடிக்கிடந்த சாதியம் யுத்தம் முடிஞ்சு மூண்டு வருசத்துக்குள்ளேயே மணக்க ஆரம்பிச்சுட்டுது. சோசலிசம், தமிழீழம், தனியாட்சி அப்பிடி இப்பிடி என்று என்னதான் பேசினாலும் தமிழன்ர வாழ்க்கைமுறை எண்டுறது சாதியோட பின்னிப்பிணைந்த சாமான்தான் எண்டத வடபகுதியில நடந்துவாற பல நிகழ்சிகள் துல்லியமா சுட்டிக்காட்டுது. சாதாரண மக்கள் மத்தியில சின்னச்சின்ன கோபங்கள் வந்தாலும் பெண்ணுடலையும், சாதியையும் சொல்லித்திட்டுறது வழக்கம்தான். ஆனால் தமிழ் மக்களின்ர தலைவர் என்டு சொல்லுறவைகளும் சமூகத்தின்ர பொறுப்பான ஆக்களா இருக்கிறவையும் தங்கட கோபத்தக் காட்டுறதுக்கு சாதிய இழிவுச்சொற்கள பயன்படுத்திறது கேட்பாரில்லாமல் வர வர கூடிக்கொண்டு போகுது. கூட்டமைப்புப் பிரதேச தலைவரில இருந்து கட்சித்தலைவர் வரையும் நீண்டகாலமா மனதுக்குள்ள இருந்த சாதிவெறிய இப்பதான் மெல்ல மெல்ல எடுத்துவிடுகினம்.

அதுபோக அண்மையில சைவவேளாளர் நலன்பேணும் அமைப்பு வெளிப்படையாகவே இயங்க ஆரம்பிச்சுட்டுது. அந்தக்காலத்தில இருந்து கொழும்பு வெள்ளவத்த எண்டால் சாதி வெறிபிடிச்ச வெள்ளாளர் வாழுற ஏரியா எண்டுதான் சொல்லுறவ. அது உண்மதான் எண்டத இப்ப இயக்கம் அமைச்சே நிரூபிச்சுப் போட்டினம்.

சாதிய ஒடுக்குமுறையும் சரிய இழிவுநிலையும் அழியவேணும் எண்டு ஒருபக்கத்தில போர்க்கொடி தூக்கினாலும் மற்றப்பக்கத்தில சாதியையும் அதன் பெருமையையும் காப்பாற்ற துடியாய் துடிக்கினம். இந்த விறுத்தத்தில தமிழர் எல்லாம் ஒரு கொடியின் கீழ வரவேணும் எண்டு இன்னுமொரு பகுதி. அதிலும் குறிப்பா வெளிநாடுகளில வாழுற தமிழர்கள் மேட போட்டுப் பேசுகினம். இவையள்ல அப்பாவித்தனமா பேசுறவையும் இருக்கினம், சாதிப்பாகுபாடுகள மறச்சிக்கொண்டு பேசுறவையும் இருக்கினம். முற்போக்கு பேசுற இலக்கியவாதிகளில இருந்து பிற்போக்கு இலக்கியவாதிகள் வரையும் சாதிய ஒழிப்பு பேசுறது ஒரு பெருமையான விசயமாத்தான் நினைக்கினமே ஒழிய சாதி விசப்பல்ல புடுங்கவேணும் எண்ட வேலத்திட்டம் ஏதாவது மனசளவில இருக்குதா என்பது சந்தேகமான விசயமாத்தான் கிடக்கு.

இண்டைய நாளில தமிழரசுக்கட்சியின்ர நடவடிக்கய பார்த்தால் மீண்டும் வேதாளம் முருக்க மரத்தில ஏறின கதையாத்தான் கிடக்கு. தமிழரசுக்கட்சி எண்டாலே அது உயர்சாதிக்கட்சி மட்டுமில்லாமல் கெலஉறுமயக் கட்சிய தூக்கிச் சாப்பிடுற அளவிற்கு இனவெறி பிடிச்ச கட்சியெண்டது சாதிய ரீதியா ஒடுக்கப்பட்ட எங்கட சனங்களுக்கு நல்லாத்தெரியும். புரட்சி பேசின கட்சியில இருந்துகூட இந்த பிற்போக்கு கட்சிக்கு மாறிக்கொண்டிருக்கினம். இதெல்லாம் சாதிய ரீதியா ஒடுக்கப்பட்ட சனங்களுக்கு நல்ல அறிகுறியில்லை எண்டு நம்பலாம். இனிமேல் புரட்சி பேசி இயக்கம் நட்த்தின ஆட்கள் மேலயும் நாங்கள் வலு கவனமாத்தான் இருக்கவேணும்.....

❐

# 1960 இல் வேர்கொள்ளாத புனித பூமி

**-இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணி-**

மத்திய மகாணத்திலுள்ள தம்புள்ள நகரத்தில் அமைந்துள்ள முஸ்லிம் பள்ளிவாசலை அகற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் செயலானது மிகவும் கண்டிக்கத்தக்கது. 1960ஆம் ஆண்டிலிருந்து இப்பள்ளிவாசல் இயங்கி வருகின்றது. அன்றிலிருந்து அப்பள்ளிவாசலானது பிரதேசசபையின் அனுமதி யுடன் பதிவு செய்யப்பட்டும் இயங்கி வந்துள்ளது. இவ்வாறு நீண்டகாலமாக முஸ்லிம் சமூகமானது தமது மதவழிபாட்டை பேணிவந்துள்ளது.

ஆனால் தற்போது 'பௌத்த புனித பூமி' எனும் கோசத்தோடு பள்ளிவாசல் அகற்றப்படவேண்டும் எனும் கோரிக்கையின் பின்னணியானது மிக ஆபத்தானதாகும். பௌத்த துறவிகள் எனப்படுவோர்களால் பள்ளிவாசல் தாக்கப்பட்டு சேதம் விளைவிக்கப்பட்டுள்ள செயலானது இலங்கை வாழ் சிறுபான்மை இனங்கள் மீதான அலட்சியப்போக்காகவும், அவர்கள் மீது மேற்கொள்ளும் ஓர் அச்சுறுத்தலாகவுமே இக்காட்டுமிராண்டிச் செயல் அமைந்துள்ளது. இந்துக்கோயில்களையும் அங்கிருந்து அகற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முன்பு அநுராதபுரத்திலும் நீண்டகாலமாக இயங்கிவந்த தர்க்கா இடிக்கப்பட்டதன் நோக்கத்தையும் நாம் இத்துடன் இணைத்தே சிந்திக்க வேண்டியுள்ளது.

பள்ளிவாசல் அமைந்துள்ள இடமானது பௌத்தர்களின் புனித பிரதேசம் என்பதாக அரச அதிகாரம் பெற்றுள்ளதாகவும் அறியக்கூடியதாக இருக்கின்றது. இலங்கையின் அரசியல் சாசனத்தின் பிரகாரம் அது ஒரு பௌத்த நாடு. இவ்வாறு சட்ட அதிகாரம் இருக்கும்போது தம்புள்ள வாழ் முஸ்லிம் சமூகமானது நீதிகோரி வழக்காடும் வல்லமையற்றதாகவும் இருக்கின்றது. 1960 ஆண்டிலிருந்து பள்ளிவாசல் இயங்கி வந்த காலங்களில் பௌத்த புனித பிரதேசமாக இல்லாத அப்பிரதேசம்



தற்போது புனித பிரதேசமாக புலப்படுவதற்கான பின்னணியை நாம் பார்க்கும்போது ஓர் உண்மையை நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடிகின்றது. அன்றில்லாதவகையில் இன்றைய பெரும்பான்மை அரசியலில் இனவாத சக்திகளின் மேலாதிக்கம் எல்லைமீறிப் போகின்றதென்பதே யதார்த்தமாகி வருகின்றது.

ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பின்னணியிலேயே தம்புள்ள பள்ளிவாசல் சம்பவம் நடைபெற்றுள்ளது. அரச தரப்பின் பலவீனம் காரணமாகவே இச்சம்பவத்திற்கான தூண்டுதல் அமைந்திருக்கமுடியும் என்பதை எம்மால் இனம் காணக்கூடியதாக உள்ளது. இதுவரை அரச உயர்மட்டமானது இக்காட்டுமிராண்டிச் செயலுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுத்ததாக செய்திகள் இல்லை.

தமிழ், முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றிணைந்து இப்பிரச்சனைக்கு தீர்வு காண முனையவேண்டும்.

❐

---

சிலபேருக்குக் குடும்பமே படித்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் குடும்பத்தைத் சேர்ந்த பையன் நன்றாக படிப்பதில் அதிசயம் ஒன்றும் இல்லை. படிக்காத குடும்பத்தைச் சேர்ந்தவன் படிக்க முன்வருவதற்கு வாய்ப்புக்கொடுக்க வேண்டுமே தவிர அவனிடம் தகுதி - திறமையைப் பார்க்கக் கூடாது.

-தந்தை பெரியார்-